අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/28/02(IV)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022.02.

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் / அதிபர்கள் /

பீடாதிபதிகள் / ஆசிரிய கலாசாலை பீடாதிபதிகள் /

ஆசிரியர் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர்கள்

**கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட கல்விசாரா ஊழியர்களின் வருடாந்த இடமாற்றம் 2022**

மேற்படி விடயம் தொடர்பில் எனது சம இலக்கம் மற்றும் 2022.01.07 திகதி கொண்ட கடிதத்தின் ஊடாக சமர்ப்பித்த 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவு மற்றும் அக்கடிதங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தங்களது தயவான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அவ் இடமாற்ற முன்மொழிவுகள் தொடர்பாக என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரிவு 1 இன் XVIII அத்தியாயத்தின் 210 மற்றும் 211 இன் பிரிவுகளின்படி வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வு குழுவின் முடிவுகளை நான் இதன் மூலம் சமர்ப்பிக்கிறேன். இங்கு செய்யப்பட்ட திருத்தங்களுக்கு உட்பட்டு மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் தொடர்பாக எனது சம மற்றும் 07.01.2022 திகதியிடப்பட்ட கடிதத்தால் முன்மொழியப்பட்ட 2022 ஆண்டுக்கான இடமாற்றங்களை நான் இங்கு அனுமதிக்கின்றேன்.

03. மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு இடமாற்றம் நடைமுறைக்கு வரும் திகதி தொடர்பில் வேறு திகதி குறிப்பிடப்படாத அனைத்து இடமாற்றங்களும் 2022-03-02 முதல் நடைமுறைக்கு வரும். அதன்படி பதிலீட்டாளர் சேவைக்கு சமூகம் தரும்வரை தாமதியாது இடமாற்றத்திற்குட்பட்ட சகல அலுவலர்களும் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமைகளை பொறுப்பேற்கும் வகையில் தற்போதைய சேவை நிலையங்களில் 2022.03.01 திகதி சேவைகளின் பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

04. வருடாந்த இடமாற்ற உத்தரவின் பேரில் முறையாக இடமாற்றம் செய்யப்பட்ட ஒரு அலுவலர் புதிய சேவை நிலையத்திற்கு கடமைக்கு சமூகம் அளிக்காத சந்தர்ப்பத்தில் அவ்வலுவலர் இடமாற்றம் கிடைக்கப்பெற்றுள்ள சேவை நிலையத்தின் பிரதானியினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 217ம் பிரிவின்படி சேவையிலிருந்து விலகியுள்ளார் என்ற அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

05. இடமாற்ற உத்தரவுகளில் அதிருப்தி அடையும் அலுவலர்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் XX அத்தியாயத்தின் 231வது பிரிவின் விதிகளின்படி பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் முறையிடலாம். இதற்காக கல்வி

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள படிவம் எண். 5A ஐ பூர்த்தி செய்து 2022-03-18 க்கு முன் என்னிடம் சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகினறேன்.

பேராசிரியர் கே. கபில சி.கே. பெரேரா

செயலாளர்

கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. செயலாளர்இ பொதுச் சேவை ஆணைக்குழுவின் – தகவல் அறிந்து கொள்ள

2. சகல மேலதிகசெயலாளர்கள்
3. பிரதம நிதி அதிகாரி
4. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
5. தேசிய பாடசாலை கல்விப்பணிப்பாளர்
6. கல்வியியல் கல்லூரிகளின் ஆணையாளர்
7. கல்வி பணிப்பாளர் (விளையாட்டு)

} தேவையான நடவடிக்கைகளுக்கு